# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109717

1. District : மாவட்டம் : Thiruvarur    PS: காவல்நிலையம் : VAC    Year: ஆண்டு : 2022    FIR No.: மு.த.அ. எண் : 05/22    Date: நாள் : 19-09-2022

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended on 2018    Sections பிரிவுகள்: 420, 409, 468, 471 IPC and 13(2) r/w 13(1)(a) P.C Act 1988 as amended on 2018
   (ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் : Jan-2021    Date to : நாள் வரை :
   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல் : (Unseasonal North East Monsoon rainfall January 2021)    Time to : நேரம் வரை : 19/09/2022 / 11.30 Hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்    Time : நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : வாட்டார் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், 40 B தெரு
   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : இரா. அருண்பிரசாத்    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : இராஜாராமன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 1973    (d) Nationality : நாட்டினம்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில்    (g) Address : முகவரி : காவல் ஆய்வாளர், VAC, திருவாரூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. ரா. வீரசேகரன், வயது 56/2022, த/பெ. முருகையன், கிராம நிர்வாக அலுவலர், 74. வாட்டார் கிராமம், கோட்டூர் பிர்கா, மன்னார்குடி தாலுகா, திருவாரூர் மாவட்டம்,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :

திருவாரூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் R.அருண்பிரசாத் ஆகிய நான் 19.09.2022 தேதி 11.30 மணியளவில், திருவாரூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்த போது, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகத்தின் குறிப்பாணை VR.No. 15074/2021/REV/TVR, நாள்.14.09.2022-ன் படி விழிப்பு அறிக்கையை பார்வையிட்டு வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு: மேற்படி விழிப்பு அறிக்கை எதிரி திரு.வீரசேகரன், த/பெ.முருகையன், கிராம நிர்வாக அலுவலர், 74 வாட்டார் கிராமம், கோட்டூர் பிர்கா, மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம் என்பவர் மீது தாக்கல் செய்யப்பட்டதாகும். எதிரி திரு.வீரசேகரன் மீது வழக்கு தொடர அனுமதி கோரப்பட்டதில் மன்னார்குடி வருவாய் கோட்ட அலுவலர் சந்தேக அலுவலர் திரு.வீரசேகரன் மீது பதிவுறு வழக்கு பதிவு செய்ய ந.க.எண் 749/2021/அ1 நாள். 30.05.2022-ன்படி அனுமதி வழங்கியுள்ளதால் இந்த வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
19/9/22

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. ARUN PRASAD
Rank: நிலை INSPECTOR No. எண் V&AC TVR.

எதிரி திரு.**வீரசேகரன்**, கிராம நிர்வாக அலுவலர், 74 வாட்டார் கிராமம் என்பவர் கடந்த **09.07.2018** முதல் **09.03.2022** வரையிலான காலங்களில் 74 வாட்டார் கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்துள்ளார். எனவே இவர் ஊழல் தடுப்பு சட்டம் **1988** பிரிவு 2(C) படி **பொது ஊழியர் ஆவார்.**

மேற்படி எதிரி திரு.**வீரசேகரன்**, கிராம நிர்வாக அலுவலர், 74 வாட்டார் கிராமம் என்பவர் கடந்த ஜனவரி **2021-ல்** வடகிழக்கு பருவ மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு வாட்டார் கிராமத்தில் **411** பயனாளிகளுக்கு, நிவாரண தொகை வழங்கியதில் எதிரி-1 பயனாளிகள் பட்டியல் தயார் செய்ததில் முறைகேடுகள் செய்து அரசுக்கு தவறான இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

## குற்றச்சாட்டு-1

எதிரி-1 திரு.வீரசேகரன், கிராம நிர்வாக அலுவலர், 74 வாட்டார் கிராமம் என்பவர் **கிராம கணக்கில் இல்லாத போலி புல எண்களை** (297/0, 228/0, 229/0, 276/0, 342/0, 226/0, 348/1b, 153/2, 352/2, 145/1, 87/1, 345/0, 320/0, 152/4b, 51/5, 361/1, 44/4b, 339, 153/5, 341/2, 346/0, 327/1, 336/1) கொண்ட நிவாரண பட்டியலில் நிலம் இல்லாத பயனாளிகளுக்கு குறிப்பிட்டு தவறாக நிவாரணம் கோரப்பட்டதால் **ரூ.2,83,500/-** அளவிற்கு அரசுக்கு தவறான இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த புல எண்களை குறிப்பிட்டு நிவாரணம் கோரப்பட்டுள்ள பயனாளிகள் தவறான லாபம் அடை ந்துள்ளனர்.

## குற்றச்சாட்டு-2

எதிரி திரு.வீரசேகரன், கிராம நிர்வாக அலுவலர், 74 வாட்டார் கிராமம் என்பவர் **கிராம கணக்கில் உள்ள** பரப்பைவிட கூடுதலான நில பரப்புகளை சில புல எண்களுக்கு **(361/0, 85/1, 344/2, 357/1, 358/1, 360/1, 86/2, 333/0, 346/1, 343, 341/0, 336/0, 343/0, 359/1, 340/2, 345/1, 358/1, 359/1)** குறிப்பிட்டு **36.10.89** ஹெக்டர் பரப்புக்கு தவறாக நிவாரணம் கோரப்பட்டுள்ளதால் **ரூ.7,62,578/-** அரசுக்கு தவறான இழப்பு ஏற்பட்டுள்ளது.

## குற்றச்சாட்டு-3

திருமதி.வித்யா, க/பெ.தமிழ்வாணன் என்ற பயனாளியின் பெயரில் பட்டியல் வரிசை எண். 144, 397ல் புல எண் 84/1, 87 ஆகியவை நிவாரண பட்டியலில் **இரண்டு முறை குறிப்பிடப்பட்டு** ரூ. **18,960/-** மற்றும் ரூ. **36,000/-** தவறாக நிவாரணம் கோரப்பட்டு ஒரே வங்கி

கணக்கில் (CUB A/c. 0310010006335007) பெற்றப்பட்டுள்ளது. இந்த புல எண் 84/1, 87 ஆகியவற்றின் கிராம கணக்கு படி மொத்த பரப்பு 1.20.0 ஹெக்டர் ஆகும். ஆனால் இந்த புல எண்களில் மொத்தம் 3.20.0 ஹெக்டர் பரப்பளவிற்கு நிவாரணம் கோரப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு **ரூ.36,000/- தவறான இழப்பு ஏற்பட்டுள்ளது.**

**குற்றச்சாட்டு-4**

**விவசாய நிலம் இல்லாதவர்கள் மற்றும் பினாமி பெயர்களில் ரூ. 5,36,530/- வரை நிவாரணம் தவறாக கோரப்பட்டுள்ளது.** நிவாரண தொகை பயனாளிகள் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்ட பின்னர் சம்மந்தப்பட்ட பயனாளிகளிடமிருந்து அந்த தொகையை கிராம நிர்வாக அலுவலரான எதிரி திரு.வீரசேகரன் பெற்றுவிட்டதாக தெரியவருகிறது. இந்த குற்றச்சாட்டு தொடர்பாக வாட்டார் கிராமத்தை சேர்ந்த திரு.தங்கமணி மற்றும் திரு.சங்கர் ஆகியோர் ஏற்கனவே ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநர் அலுவலகத்திற்கு மனு அனுப்பியுள்ளார்கள்.

எனவே எதிரி திரு.வீரசேகரன், கிராம நிர்வாக அலுவலர், 74 வாட்டார் கிராமம் என்பவர் ஜனவரி 2021-ல் வடகிழக்கு பருவ மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு வாட்டார் கிராமத்தில் 411 பயனாளிகளுக்கு, நிவாரண தொகை பெற்று வழங்கியதில் எதிரி திரு.வீரசேகரன் பயனாளிகள் பட்டியல் தயார் செய்ததில் முறைகேடுகள் செய்து அரசுக்கு தவறான இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

எனவே மேற்படி எதிரி திரு.வீரசேகரன், கிராம நிர்வாக அலுவலர், 74 வாட்டார் கிராமம் என்பவர் மீது பதிவுறு வழக்கு பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ள மன்னார்குடி வருவாய் கோட்ட அலுவலர் எதிரி திரு.வீரசேகரன் மீது பதிவுறு வழக்கு பதிவு செய்ய ந.க.எண் 749/2021/அ1 நாள். 30.05.2022-ன்படி வழக்கு பதிவு செய்ய முன் அனுமதி (U/s 17(A) P.C Act 2018படி) வழங்கியுள்ளார்கள். மேலும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்க நமுனா எண். 15074/2021/REV/TVR, நாள் : 14.09.2022 படி எதிரி திரு.வீரசேகரன் மீது வழக்கு பதிவு செய்திட உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

எதிரி திரு.வீரசேகரன், கிராம நிர்வாக அலுவலர், 74 வாட்டார் கிராமம் என்பவர் மீதான மேற்காணும் குற்றச்சாட்டுகள் மற்றும் குற்றமுறு நடவடிக்கைகள் இ.த.ச பிரிவு 420, 409, 468, 471 இ.த.ச மற்றும் 13(2) உ/இ 13(1)(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended 2018) படி தண்டனைக்குரிய குற்ற செயல்களாகும்.

Contin... .. of FIR Cr.No. 05/2022

எனவே மேற்படி எதிரி திரு.வீரசேகரன், கிராம நிர்வாக அலுவலர், 74 வாட்டார் கிராமம் என்பவர் மீது 19.09.2022 தேதி 11.30 மணியளவில் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 05/2022 பிரிவு 420, 409, 468, 471 இ.த.ச மற்றும் 13(2) உ/இ 13(1)(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended 2018)-படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதன் முதல் தகவல் அறிக்கை மற்றும் மன்னார்குடி வருவாய் கோட்ட அலுவலர் எதிரி திரு.வீரசேகரன் மீது பதிவுறு வழக்கு பதிவு செய்ய ந.க.எண் 749/2021/அ1 நாள். 30.05.2022-ன்படி வழக்கு பதிவு செய்வதற்கான வழங்கியுள்ள முன் அனுமதியின் நகல் ஆகியவற்றை இத்துடன் இணைத்து கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்களுக்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

19/9/22

INSPECTOR OF POLICE.
VIGILANCE AND ANTI CORRUPTION.
THIRUVARUR.